பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 22 | ஞாயிற்றுக்கிழமை | 07.01.2024 | அதிர்வு 159

## பெற்ற தாயை அடித்து கொலைசெய்த மகன்

கம்பளையில் மகனின் தாக்குதலில் தாய் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

65 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தாய், தனது இரண்டாவது 06



### ஜனாதிபதியுடனான சந்திப்பை

# புறக்கணித்தது நல்லை ஆதீனம்

### ஏற்கனவே முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என விசனம்

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீசோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் புறக்கணித்துள்ளார்.**

**நான்கு நாள் விஜயமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வந்துள்ளார்.** 06

# எந்தத் தேர்தலையும் எதிர்கொள்ளத் தயார்

### மஹிந்த வீறாப்பு



நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு முன்கூட்டியே பொதுத்தேர்தல் நடத்தப்படுமானால் அதனை எதிர்கொள்வதற்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தயார் என்று அக்கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எந்தத் தேர்லை எதிர்கொள்ள நாம் தயார். ஆட்சி 05

## அகிலத் திருநாயகியை நேரில் பாராட்டிய ரணில்



பிலிப்பைன்ஸில் நடைபெற்ற 22ஆவது 'மூத்தோருக்கான ஆசிய தடகள சாம்பியன்ஷிப்' போட்டியில் கலந்துகொண்டு தங்கப் பதக்கம் வென்ற

அகிலத் திருநாயகியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நேரில் அழைத்துப் பாராட்டி – கௌரவித்து – மதிப்பளித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது, வயது என்பது 05

## வேட்பாளராகப் போட்டியிட பஸிலுக்கும் விருப்பமாம்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷவும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட ஆர்வமாக வுள்ளார் என்று அக்கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன் காரணமாக அவரது அமெரிக்கக் குடியுரிமையை இரத்துச் செய்வதற்கான ஆலோசனைகளை அவர் நடத்தி வருகின்றார். எதிர்காலத்தில் இது தொடர்பான இறுதி முடிவை எடுக்கக் கட்சியின் 05




வெளிநாட்டில் இருந்து நண்பர் ஒருவர் ஒரு படத்தையும் ஒரு குறிப்பையும் அனுப்பி இருந்தார்.

அந்தப் படத்தில் மேற்கு நாடு ஒன்றில் ஒரு ரயில்வே நிலையத்தில் பயணிகள் மேடையில் ஒரு பெஞ்சில் ஒரு நடுத்தர வயது அம்மணி தனிமையில் அமர்ந்திருந்தார்.

அவர் எழுதியிருந்த குறிப்பில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது:–

சுவீடன் பிரஜை ஒருவர் 06



# மயிலிட்டி கலைமகள் ம.வியின் காணி விரைவில் விடுவிப்பதற்கு நடவடிக்கை

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

சுமார் 28 வருடங்களின் பின்னர் பாதுகாப்புப் படையினரிடமிருந்து விடுவிக்கப்பட்ட யாழ்.மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயத்திற்கான புதிய கட்டடம் ஒன்றை நிர்மாணிக்க இலங்கை விமானப்படை முன்வந்துள்ளது. அதற்கமைய குறித்த பிரதான மண்டபக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இலங்கை விமானப்படையின் வான்வெளிப் பொறியியல் துறையின் பணிப்பாளர் நாயகம் ஏயார் வைஸ் மார்ஷல் முதித்த மஹவத்தகே, திட்ட இணைப்பாளர் குரூப் கப்டன் துஷார பண்டார, இலங்கை விமானப் படையின் பலாலி படைத்தளத்தின் கட்டளை அதிகாரி குரூப் கப்டன் சமிந்த ஹேரத் , இலங்கை விமான படையின் அதிகாரிகள், வடக்கு மாகாண பிரதம செயலாளர், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், கல்வி துறைசார் அதிகாரிகள் , மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துக்கொண்டனர்.



சுமார் எட்டு மில்லியன் ரூபா செலவில் இலங்கை விமானப் படையினரால் பாடசாலைக்கான புதிய கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது. விமானப் படையின் 73 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் அங்குரார்ப்பண நிகழ்வாக இந்த அடிக்கல் நாட்டும் நிகழ்வு அமைந்துள்ளது. அத்துடன் பாடசாலை வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. நூலகத்திற்கான புத்தகங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

205 வருடகால வரலாற்றை கொண்ட யாழ்.மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயத்திற்கு சொந்தமான 2.5 பேர்ச் காணி இதுவரை விடுவிக்கப்படாமல் உள்ளதாகவும், விளையாட்டு மைதானம் புனரமைக்கப்படவில்லை எனவும் பாடசாலையின் அதிபர் இதன்போது கூறினார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், மிக விரைவில் அதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனவும் இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார். ஏனைய உட்கட்டமைப்பு பிரச்சினைகள் தொடர்பில் எழுத்துமூலம் கோரிக்கைகளை சமர்பிக்குமாரும், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

1818 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நான்காம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட யாழ்.மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயம், அசாதாரண நிலைமையின் காரணமாக, 1990ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் திகதி பாதுகாப்பு படையினர் கைப்பற்றினர். சுமார் 28 வருடங்களின் பின்னர் 2018 ஆம் ஆண்டு 09 மாதம் 06 ஆம் திகதி இந்த பாடசாலை மீண்டும் பொது மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.











# முல்லைத்தீவு இடைக்கட்டுப் பிரதேசத்தில் நெற்செய்கை காட்டு யானைகளால் அழிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்குட்பட்ட இடைக்கட்டுக் குளத்தின் கீழான நெற்பயிர்ச் செய்கையைத் தொடர்ச்சியாகக் காட்டு யானைகள் அழித்து வருகின்றன என விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பயிர் செய்யப்பட்ட நெற்பயிர்கள் அறுவடைக்குத் தயாரா கவுள்ள நிலையில் தொடர்ச்சியான காட்டு யானைகளின் வருகையும், அழிப்பும் தமக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளன என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தமது நெற்பயிர்ச் செய்கையை பாதுகாப்பதற்கான யானை வேலிகள் அமைத்து தருமாறு பலமுறை கோரிக்கை விடுத்தும் இது வரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட வில்லை எனப் பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

## கட்டுமானத் தொழிலாளர்கள் சங்கம் சீமெந்து விலை உயர்வுக்கு எதிர்ப்பு




சீமெந்து விலை அதிகரித்தமையினால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது என தேசிய கட்டுமானத் தொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

தேசிய கட்டுமானத் தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் சுபுன் அபேசேகர இதனை தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார சிக்கலுக்கு மத்தியில், கட்டுமானத் துறை ஓரளவு வளர்ச்சி அடையத் தொடங்கிய வேளையில், மீண்டும் சீமெந்தின் விலை அதிகரிக்கப்பட்டமையானது மோசமான பாதிப்பை ஏற்படுத்துகிறது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, 50 கிலோ கிராம் எடைக்கொண்ட சீமெந்து மூடை ஒன்றின் விலை 150 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டது.

இதற்கமைய, 50 கிலோ கிராம் எடைக்கொண்ட சீமெந்து மூடை ஒன்றின் விலை 2 ஆயிரத்து 450 ரூபாவாக உயர்ந்துள்ளது.

முன்னதாக 50 கிலோ கிராம் எடை கொண்ட சீமெந்து மூடை ஒன்று 2,300 ரூபாவுக்கு விற்பனை செய்யப் பட்டமை குறிப்பிடத்தக்கது.




## டெங்கு தொடர்பில் அறிவிக்க துரித தொலைபேசி இலக்கம்

டெங்கு நோயை தடுப்பது மற்றும் கட்டுப்படுத்துவது தொடர்பான பொது அழைப்புகளுக்காக துரித தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, டெங்கு நோயை தடுத்தல் மற்றும் கட்டுப் படுத்துவதற்காக 011 7 966 366 என்ற துரித தொலை பேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப் பிட்டுள்ளார்.





## மன்னார் - வங்காலையில் படுகொலை செய்யப்பட்ட

# அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளாரின் 39ஆம் ஆண்டு நினைவு விசேட திருப்பலி

**(மன்னார் நிருபர்)**

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்தும், உயிரிழந்த மக்களின் உடல்களை மீட்டு அடக்கம் செய்யவும்,பல்வேறு மனிதாபி மான பணிகளில் ஈடுபட்டு வந்த மன்னார் வங்காலை புனித ஆனாள் ஆலய பங்குத்தந்தை அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார் 1985 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6 ஆம் திகதி அரச படைகளால் படுகொலை செய்யப்பட்டார்.

மேலும் அவருடன் பொதுமக்களும் படுகொலை செய் யப்பட்டனர்.



மன்னார்– வங்காலையில் 1985 ஜனவரி 6ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட அமரர் அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளாரின் 39 ஆம் ஆண்டு நினைவு நேற்று சனிக் கிழமை வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் நினைவு கூரப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் தலைமையில் இன்று சனிக்கிழமை காலை இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.









இதன் போது படுகொலை செய்யப்பட்ட அமரர் அருட் பணி மேரி பஸ்ரியன் அடிகளாரின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்து சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

அருட்தந்தையுடன் சேர்ந்து இன்னுயிர் நீத்த உறவுகளுக் கும் நேற்றுத் தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.








# வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் நுவரெலியா மத்திய நிலையம் இன்று திறப்பு

கொழும்பு, ஜனவரி. 07

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் நுவரெலியா மாவட்டத்திற்கான மத்திய நிலையம் இன்று 07 ஆம் திகதி மக்கள் பாவனைக்காக கையளிக்கப்படவுள்ளது.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் தலைமையில் இதற்கான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 18 ஆம் திகதி சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்தையொட்டி நுவரெலியா மாவட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வின் போது அப்பகுதி சிறார்களினால் அமைச்சரிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நுவரெலியா மாவட்ட செயலகத்தின் 05 ஆம் மாடியில் இந்த மத்திய நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக பணியகத்தின் பதிவுகளை பெற்றுக்கொள்ளல், வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் தொடர்பான முறைப்பாடுகளை முன்வைத்தல், பத்தரமுல்லை பிரதான அலுவலகத்தில் முன்னெடுக்கப்படும் அனைத்து சேவைகளையும் வழங்கல் என்பன இந்த புதிய மத்திய நிலையத்தினூடாக முன்னெடுக்கப்படவுள்ளன.

## எந்தத் தேர்தலையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் நடத்தப்படுமானால் அதனை எதிர்கொள்வதற்கும் நான் தயார்.

வற் வரி அதிகரிப்பு பற்றி தற்போது பேசுகின்றனர். அதனை நாம் குறைத்ததால்தான் எமக்கு எதிராக நீதிமன்றம் சென்றனர். எமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்று தற்போது கூற முடியாது. ஆனால், அந்தப் பட்டியலில் எனது பெயர் இல்லை என்பதை மட்டும் கூற முடியும். ஜனாதிபதி வேட்பாளர் உரிய நேரத்தில் அறிவிக்கப்படுவார்." – என்றார்.

## அகிலத் திருநாயகி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெறும் இலக்கம் மட்டுமே என்பதை நிரூபித்து அகிலத்தை வென்ற அகிலத் திருநாயகிக்கு ஜனாதிபதி வாழ்த்துக்களைத் தெரிவித்துகொண்டார்.

அத்துடன், வடக்கு மாகாணத்தில் விளையாட்டுத்துறை மேம்பாட்டுக்காக முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டங்களுக்கு ஆதரவையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

இவருக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்குமாறும் வடக்கு ஆளுநருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெற்ற சிரேஷ்ட பிரஜைகளுக்கான தடகளப் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்றிருந்த திருமதி அகிலத் திருநாயகி (வயது 72) இரண்டு தங்கப் பதக்கங்கள் மற்றும் ஒரு வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

முல்லைத்தீவு, முள்ளியவளை பகுதியைச் சேர்ந்த இவர், 1,500 மற்றும் 5000 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கம் வென்றுள்ளார். 800 மீமீற்றர் ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார். 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளார்.

அப்போட்டிக்கு முன்னர் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திய 22 ஆவது ஆசிய சிரேஷ்ட பிரஜைகளுக்கான போட்டியில் பங்கேற்ற இவர், அதில் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்றார்.

இவர்ஓய்வுபெற்றசிறைச்சாலைஅதிகாரியாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வேட்பாளராகப் போட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முக்கிய உறுப்பினர்களுடன் பஸில் ராஜபக்ஷ பேச்சு நடத்தவுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இதுவரை 4 பேர் விருப்பத்தை வெளியிட்டுள்ளனர் என்று அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

அத்துடன், தற்போது ஐந்தாவது நபராக பஸில் ராஜபக்ஷவும் ஜனாதிபதி வேட்பாளராகும் விருப்பத்தில் உள்ளார். இதனால், அக்கட்சி பல்வேறு நெருக்கடிகளை எதிர்வரும் நாள்களில் சந்திக்க நேரிடும் என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, பொதுஜனபெரமுனவின் பல முக்கிய உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவளிக்கும் நிலைப்பாட்டில் உள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தனது அன்றைய நாள் வேலை முடிந்து வீடு திரும்புவதற்காக ரயிலுக்குக் காத்திருக்கின்றார். அவர் தனது இரவு உணவுக்காக 'பேகர்' ஒன்றை வாங்கி கையில் வைத்திருக்கின்றார்.



A Swedish citizen waiting for the train to return home immediately after leaving work.She has bought a Burger for her Dinner.This is her picture after being asked to pose for a photo.The name of this citizen is Elva Johansson and her job is Minister of Labor in Sweden.She has no caravan of cars, she has no line of guards. She doesn't even have helpers.Sweden is a rich, developed country, but they show great discipline in the use of public funds!Developing countries can learn from this Lady the use of taxpayers money...

அவரிடம் படத்துக்கு ஒரு போஸ் கொடுங்கள் என்று கேட்டபோது , அவர் கொடுத்த போஸ் இதுதான்.

அந்தப் பிரஜையின் – பெண்மணியின் பெயர் எல்வா ஜோஹன்சன். அவரது வேலை சுவீடன் நாட்டின் தொழிலாளர்கள் நல அமைச்சர். என்றாலும் அவரிடம் வாகனப் பேரணி இல்லை. அவரைச் சூழப் பாதுகாப்பு அணியினர் எவரும் இல்லை. ஏன், அவருக்கு உதவியாளர் என்று கூட ஒருவரும் இல்லை.

சுவீடன் அபிவிருத்தி அடைந்த – பணக்கார – நாடு. ஆனால் பொது நிதியைப் பயன்படுத்துவதிலும் செலவிடுவதிலும் அவர்கள் மிகுந்த ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கின்றார்கள்.

வரிசெலுத்துவோரின் நிதியைத் தண்ணீராகப் பயன்படுத்தும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள், இந்தப் பெண் மணியிடம் பாடம் படிக்க வேண்டும்."

– இதுதான் அந்த நண்பர் அனுப்பிய குறிப்பில் இருந்த விடயங்கள்.

நம்ம நாட்டில் எம்.பிக்கள், அமைச்சர்கள் பண்ணுகின்ற அலப்பறையை யோசிக்கும் போது வெட்கமாகத்தான் இருக்கின்றது. குறிப்புக்கு ஒரு தகவல்:–

இங்கு ஓர் அமைச்சர் அல்லது இராஜாங்க அமைச்சர் என்றால் அவருக்கு வாகனம், 'பக்–அப்' வாகனங்கள், பாதுகாப்பு வாகனங்கள், அவற்றுக்கான சாரதிகள், எரிபொருள்கள், வாகனப் பராமரிப்பு என்று ஒரு கொள்ளைச் செலவுகள். போதாக்குறைக்கு அவர் ஏதேனும் தேர்தல் மாவட்டத்தின் கீழ்வரும் நிர்வாக மாவட்டங்களில் இணைப்புக் குழுக்களுக்குத் தலைவராக இருந்து விட்டால், அந்த நிர்வாக மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வாகனம், சாரதி, எரிபொருள், பராமரிப்பு நிதி என்று அடுத்த கட்ட கொள்ளை...!

இந்த நாடு எப்படித்தான் திருந்தப் போகின்றதோ?

## பெற்ற தாயை அடித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மகனால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

34 வயதுடைய சந்தேகநபரான மகன் திருமணமானவர் எனவும், அவரது மனைவி வெளிநாட்டில் வேலை செய்கின்றார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் தனது 8 வயது மகளுடன் கொலை இடம்பெறவீட்டில்வசித்துவருகின்றார். நோய்வாய்ப்பட்ட அவரது தாயாரும் அந்த வீட்டில் வசித்து வந்துள்ளார்.

சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கம்பளைக்கு வந்தபோது, சந்தேகநபரான மகனிடம் மருந்து எடுத்து வருமாறு தாய் கூறியுள்ளார்.

ஆனால், அவர் மது அருந்திவிட்டு வீட்டுக்கு வந்தபோது மருந்து கொண்டு வரவில்லை என்று தாய் குற்றம் சாட்டியுள்ளார். இதனால் மகன் ஆத்திரமடைந்து தாயைத் தாக்கியுள்ளார்.

தனது தந்தை தனது பாட்டியை இரும்புக் கம்பியால் தாக்கினார் என்று சந்தேகநபரின் 8 வயது மகள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். எனினும், தாயை நாற்காலியால் தான் தாக்கினார் என்று பொலிஸாரிடம் சிக்கியுள்ள சந்தேகநபர் குறிப்பிட்டுள்ளார்.

மிகவும் கடினமான பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த வீட்டுக்கு அருகில் வேறு வீடுகள் எதுவும் இல்லாததால் தாக்கப்பட்ட தாய் மறுநாள் (நேற்று) காலை வரை வீட்டிலேயே வைக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை மற்றொரு மகன் தாயைக் கம்பளை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றார். அங்கு சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று மதியம் உயிரிழந்தார்.

இதையடுத்துத் தலைமறைவாகியிருந்த மகன் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## புறக்கணித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தனது விஜயத்தின் போது பல்வேறு தரப்பினர்களையும் அவர் சந்தித்து வருகின்றார்.

இதன் ஒருபகுதியாக யாழ். மாவட்டச் செயலகத்தில் யாழ்.மாவட்ட சர்வ மதத் தலைவர்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடியிருந்தார்.

இதில் சர்வ மதங்களை சார்ந்தவர்கள் கலந்துகொண்டிருந்தனர். எனினும், இந்த கலந்துரையாடலில் நல்லை ஆதீன குரு முதல்வர் கலந்துகொள்ளவில்லை.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவரும் நல்லை ஆதீனத்தின் செயலாளருமான ஆறு திருமுருகன், "நல்லை ஆதீன குரு முதல்வர் பிறிதொரு இடத்துக்குச் சென்று ஜனாதிபதியைச் சந்திக்க வேண்டிய தேவை இல்லை" – என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நல்லை ஆதீன குரு முதல்வர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஏற்கனவே முன்வைத்த கோரிக்கைகளுக்கு எந்தவித தீர்வும் வழங்கப்படவில்லை என்பதனால் இனியும் ஜனாதிபதியுடன் பேசி பிரயோசனம் இல்லை என்பதால் அவருடனான சந்திப்பைப் புறக்கணித்தோம்.

கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தேசிய தைப்பொங்கல் நிகழ்வில் கலந்துகொள்வதற்கு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நல்லை ஆதீனத்தில் நல்லை ஆதீன குரு முதல்வருடன் என்னையும் சந்தித்திருந்தார்.

அதன்போது பல விடயங்களை நாங்கள் ஜனாதிபதிக்கு எடுத்துரைத்திருந்தோம். அவற்றை உடனடியாகவே செயற்படுத்துமாறும் கோரிக்கை விடுத்திருந்தோம். ஆனால், அதில் எந்த விடயமும் இன்று வரை நிறைவேற்றப்படவில்லை.

அதன் காரணமாகவே யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியுடனான சர்வ மதத் தலைவர்களின் கூட்டத்தில் நாம் பங்கேற்கவில்லை." – என்றார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அலப்பறை அறிவிப்புகள்

“காலம் காலமாகப் பொய்யான வாக்குறுதிகளை வழங்கித் தமிழ் மக்களை ஏமாற்றுகின்றனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொய்யான - ஏமாற்று - வேலைகளை, அறிவிப்புகளை நம்புவதற்கு தமிழர்கள் முட்டாள்கள் அல்லர்” - என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியிருக்கின்றார்.

உண்மைதான். கடந்த மூன்று, நான்கு நாள்களாக வடக்கே வந்து தங்கி இருந்து கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுக்கும் அலப்பறை அறிவிப்புகள் தாங்க முடியாதவையாகத்தான் இருக்கின்றன.

தமிழ் மக்கள் யதார்த்தம் புரியாதவர்கள், அறிவற்றவர்கள் என்று எண்ணிக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேசுகின்றாரோ என நினைக்கத் தோன்றுகின்றது.

மாகாண சபைகளுக்கான தேர்தல்களே இல்லை. அவை எப்போது நடைபெறும் என்றும் தெரியாது. அவற்றை - மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட மாகாண சபைகளை - இயங்கவிடாமல் ஆப்படித்தவரே ரணில் விக்கிரமசிங்கதான். அப்படி மாகாண சபைகளில் மக்கள் பிரதிநிதித்துவத்தை அடியோடு அழித்த அவர், மாகாண சபைகள் மற்றும் 13-ஆம் திருத்தம் போன்றவை மூலம் மாகாணத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தலாம் என்று வடக்கே வந்து தமிழர்களுக்குப் பாடம் எடுக்கின்றார்.

அரசமைப்பில் இருப்பவற்றை - 13ஆம் திருத்தத்தை - முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதி இனித்தான் பெறப்பட வேண்டும் என்று தமிழ் மக்களுக்கு அரசமைப்புச் சட்டப் பாடம் போதித்த அதிமேதாவியான அதிஉத்தமர் அவர்தான்.

வடக்கு மாகாணம் அடுத்த ஐந்து வருடங்களில் அபிவிருத்தி செய்யப்படும் என்ற கருத்தை வவுனியாவிலிருந்து விடுத்தவரும் அவர்தான். அடுத்த பத்து மாதங்களுக்குப் பின்னர் ஜனாதிபதி பதவிக் கதிரையில் தாம் இருப்பாரோ என்று தெரியாத இக்கட்டில் நிற்கும் அவர், அடுத்த ஐந்து வருடங்களில் வடக்கு அபிவிருத்தி என்று கணக்கு விடுகின்றார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் சர்வ மத தலைவர்களுடனான சந்திப்பு என்ற ஒன்றை நடத்தி, அங்கும் புதிய அலப்பறை அறிவிப்பை விடுத்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

கடந்த வருடம் தைப்பொங்கல் தினத்தில் நல்லை ஆதீனத்தில் இந்து மதத் தலைவர்களைச் சந்தித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அப்போது அங்கு கொடுத்த உறுதிமொழி எதனையும் நிறைவேற்றுவதற்கு எண்ணிக் கூடப் பார்க்கவில்லை என்று இப்போது விசனம் தெரிவித்துள்ள அகில இலங்கை இந்துமாமன்றத் துணைத்தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் மற்றும் நல்லை குருமகாசந்நிதானம் போன்றோர், நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் நடத்திய சர்வ மதத் தலைவர்கள் கூட்டத்திற்கு சமுகம் தரவில்லை.

நேற்றைய கூட்டத்தில் இனம், மதம் என்று பிளவுபடத்தேவையில்லை என்று குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொருளாதார வளர்ச்சிக்கு மத நல்லிணக்கம் மிகவும் முக்கியம் என்று தத்துவம் பேசி இருக்கின்றார்.

இந்தத் தத்துவத்தை யாழ்ப்பாணத்தில் வந்து நின்று அவர் பேசுவதில் அர்த்தமில்லை. பௌத்த - சிங்கள பேரினவாதம் பேயுருக்கொண்டு சந்நதமாடும் தென்னிலங்கையில் போய்த்தான் இந்த போதனைகளையும் உபதேசங்களையும் அவர் செய்ய வேண்டும்.

அங்குதான் மதவாதப் பிணி பெருந்தொற்றாகப் பீடித்து, இலங்கைத் தீவை அழிக்கும் நிலையில் கோர உருக் கொண்டு நிற்கின்றது.


மற்றைய இனத்தவர்களின் - மதத்தவர்களின் - தனித்துவத்தையும், வரலாற்றுத் தொன்மைகளையும், அழித்து ஏப்பமிடும் கோலத்தில் கொடூர உருக் கொண்டு நிற்கும் பேரினவாதம்தான் இலங்கைத்தீவில் மத நல்லிணக்கத்திற்கு முதலும் முடிவுமான முழு எதிரி.

ஆகவே தெற்கில் செய்ய வேண்டிய உபதேசங்களை, வடக்கு மக்களை ஏமாளிகளாக நினைத்துக் கொண்டு இங்கு வந்து முழங்குகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இவற்றை அவர் தெற்கில் போய்த்தான் சொல்ல வேண்டும்.

என்று தணியும் இந்த அலப்பறை அறிவிப்புகள்...?

# இலக்கை அடைந்தது ஆதித்தியா எல் - 01

## - பிரதமர் நரேந்திர மோடி பாராட்டு




சூரியனை ஆராய்வதற்காக இந்தியாவின் விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோவினால் ஏவப்பட்ட ஆதித்தியா எல் 01 என்ற விண்கலம் தமது இலக்கை அடைந்துள்ளது.

கடந்த வருடம், செப்டம்பர் மாதம் 2 ஆம் திகதி ஸ்ரீ ஹரிகோட்டா விண்வெளி நிலையத்தில் இருந்து குறித்த விண்கலம் விண்ணில் ஏவப்பட்டது.

இஸ்ரோவின் ஆதித்யா எல் – 1 என்ற விண்கலம், நீள்வட்டப்பாதையில் பூமியைச் சுற்றி படிப்படியாக தமது சுற்றுப்பாதையை அதிகரித்து சூரியனை நோக்கி நீண்ட பயணத்தை மேற்கொண்டு, பூமியிலிருந்து 15 லட்சம் கிலோமீற்றர் தொலைவில் உள்ள முதல் லக்ராஞ்சியன் புள்ளியைச் சுற்றி நிலவும் பூச்சிய ஈர்ப்பு விசையுள்ள சுற்றுப் பாதையில் நுழைந்துள்ளது.

ஆதித்தியா எல் – 1 என்ற விண்கலம், தொடர்ச்சியாக 5 வருடங்கள் அந்த லாக்ராஞ்சியன் புள்ளியில் இருந்து சூரியனை ஆராய்ச்சி செய்யும் என குறிப்பிடப்படுகிறது.

இஸ்ரோவின் இந்த வெற்றியின் மூலம் சூரியன் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் 4 ஆவது நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது.

இதேவேளை, ”மனிதகுலம் பயன் பெறும் வகையில் அறிவியலில் புதிய எல்லைகளை அடையும் வகையில் இந்தியா தொடர்ந்து பணியாற்றும்” என்று ஆதித்யா எல்–1 விண்கலம் சூரிய ஒளி வட்டப் பாதையில் நிலை நிறுத்தப்பட்ட பின் பிரதமர் மோடி கருத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“இந்தியா புதிய மைல்கல்லை எட்டி, இன்னொரு அடையாளத்தை உருவாக்கியுள்ளது. நமது விஞ்ஞானிகளின் அர்ப்பணிப்புக்கு இது ஒரு சான்றாகும். மிகவும் சிக்கலான நுணுக்கமான சாதனையை படைத்துள்ளது இஸ்ரோ. விஞ்ஞா னிகளின் இந்த அசாதாரண சாதனையை நாட்டு மக்களுடன் இணைந்து பாராட்டுகிறேன். மனிதகுலம் பயன் பெறும் வகையில் அறிவியலில் புதிய எல்லைகளை அடைய இந்தியா தொடர்ந்து பணியாற்றும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

# ‘கலைஞர் 100’ விழாவில் திரை பிரபலங்கள் பங்கேற்பு

தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம் நடத்தும் ‘கலைஞர் 100’ விழாவில் திரையுலகைச் சேர்ந்த பெரும்பாலான நட்சத்திரங்களும் கலந்து கொண்டுள்ளனர்.

மறைந்த முன்னாள் முதல்வரும், தி.மு.க. தலைவருமான கருணாநிதியின் நூற்றாண்டு விழா ‘கலைஞர் 100’ என்ற பெயரில் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம் சார்பில் கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டது.


தமிழ்நாடு அரசிடம் இதற்கான ஒப்புதல் பெறப்பட்டு சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் கடந்த டிசம்பர் 24 ஆம் திகதி பிரமாண்டமாக நடத்த திட்டமிடப்பட்டது.

ஆனால், டிசம்பர் முதல் வாரத்தில் எதிர்பாராதவிதமாக சென்னையை மிக்ஜாம் புயல் தாக்கி, பெரும் சேதத்தை ஏற்படுத்திய நிலையில் நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில், நேற்று சென்னை கிண்டியில் உள்ள ரேஸ் கோர்ஸ்







மைதானத்தில் மாலை 5 மணி அளவில் ‘கலைஞர் 100’ நிகழ்வு தொடங்கியது. இதற்காக 22 ஆயிரத்து 500 இருக்கைகள் தயார் செய்யப்பட்டன.

தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திரங்களான ரஜினி, கமல், விஜய் தொடங்கி திரையுலகைச் சேர்ந்த பலருக்கும் தயாரிப்பாளர் சங்கம் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அந்த வகையில் நடிகர் ரஜினி, கமல் விழாவில் கலந்து கொண்டுள்ளார்.

தவிர, கார்த்தி, சூர்யா, தனுஷ், சிவராஜ்குமார், உதயநிதி ஸ்டாலின், நயன்தாரா, கீர்த்தி சுரேஷ், கௌதமி, வடிவேலு, சோனியா அகர்வால், ரோஹினி, பார்த்திபன், ஆர்.ஜே.பாலாஜி, இயக்குநர்கள் பா.ரஞ்சித், வெற்றிமாறன், லோகேஷ் கனகராஜ், தங்கர் பச்சான், டி.ராஜேந்திரன், ஷங்கர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# இன்று பங்களாதேஷில் நாடாளுமன்றத் தேர்தல்

## - பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்



பங்களாதேஷில் இன்று 12 ஆவது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. பங்களாதேஷின் 12 ஆவது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் இன்று காலை 8 மணிக்குத் தொடங்கி மாலை 4 மணி வரை நடைபெற உள்ளது.

மொத்தமுள்ள 350 நாடாளுமன்றத் தொகுதிகளில், 50 தொகுதிகளுக்கு அரசால் பெண்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதால் மீதமுள்ள 300 தொகுதி களுக்கு இன்று தேர்தல் நடைபெற உள்ளது. 90 பெண்கள், 79 சிறுபான்மை யினர் உள்பட 1,970 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

இந்த தேர்தலில் 28 அரசியல் கட்சிகள் சார்பில் வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். அதோடு, 747 சுயேட்சைகளும் போட்டியிடுகின்றனர்.

இந்த தேர்தல், ஆளும் அவாமி லீக் கட்சிக்கும், எதிர்க்கட்சியான ஜாட்டியா கட்சிக்கும் இடையேயான போட்டியாகப் பார்க்கப்படுகிறது. ஷேக் ஹசீனா தலைமையிலான அவாமி லீக் சார்பில் 266 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். 34 தொகுதிகளை இக்கட்சி கூட்டணி கட்சியினருக்கு ஒதுக்கி உள்ளது.

ஜாட்டியா கட்சி 265 வேட்பாளர்களை நிறுத்தியது. எனினும் இவர்களில் 26 பேர் வேட்புமனுவை திரும்பப் பெற்றுக்கொண்டனர். பிரதான எதிர்க் கட்சியான பங்களாதேஷ் தேசியவாத கட்சி இந்த தேர்தலை புறக்கணித்துள்ளது. தற்போதுள்ள அரசின் தலைமையில் தேர்தல் நியாயமாக நடக்காது என்பதால் தேர்தலை புறக்கணிப்பதாக அக்கட்சி அறிவித்துள்ளது.

தேர்தலை முன்னிட்டு பங்களாதேஷில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. நாடு முழுவதும் இராணுவம் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. தேர்தலுக்குப் பின்னரும் அமைதியை உறுதிப்படுத்தும் நோக்கில் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை இராணுவம் பாதுகாப்புப் பணியை மேற்கொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கடலோர காவல்படை, பங்களாதேஷ் எல்லை காவல்படை, அதரடிப்படை ஆகியவையும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

எனினும், கடந்த சில நாட்களாக பங்களாதேஷில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என செய்திகள் தெரிவிக்கின்றன. தலைநகர் டாக்காவில் பெனாபோல் எக்ஸ்பிரஸ் ரயிலுக்கு மர்ம நபர்கள் தீ வைத்ததில் பயணிகளில் 4 பேர் உயிரிழந்தனர். தேர்தலை முன்னிட்டு சிறுபான்மையினர் குறிவைக்கப்படலாம் என்பதால், சிறுபான்மையினருக்கு கூடுதல் பாதுகாப்பு அளிக்குமாறு இந்து மதம்-புத்த மதம் - கிறிஸ்தவ மதங்களின் ஐக்கிய கூட்டமைப்பு அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

# ஹொலிவுட் நடிகர் கிறிஸ்டியன் ஒலிவர் 2 மகள்களுடன் விமான விபத்தில் பலி!





ஹொலிவுட் நடிகர் கிறிஸ்டியன் ஒலிவர் விமான விபத்தில் பலியாகியுள்ளார்.

கரீபியன் தீவு அருகே ஏற்பட்ட அந்த விபத்தில் அவரது இரண்டு மகள்களும் விமானியும் பலியாகியுள்ளனர்.

இவர் தனது இரண்டு குழந்தைகளுடன் சிறிய ரக விமானத்தில் பெக்கியா என்ற சிறிய தீவில் இருந்து செயின்ட் லூசியா புறப்பட்டபோது, சிறிது நேரத்தில் விபத்து இடம்பெற்றுள்ளது.

தகவல் அறிந்து செயின்ட் வின்சென்ட் மற்றும் கிரெனடைன்ஸ் கடலோர காவல்படையினர், நீர்மூழ்கி வீரர்கள், மீனவர்கள் தங்களது படகுகளில் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

எனினும், 4 பேரையும் சடலமாகவே மீட்க முடிந்துள்ளது. ஆரம்ப காலத்தில் தொலைக்காட்சித் தொடரில் நடித்து பிரபலமானார். அதன் பின் 60 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.

# தமிழரசுக் கட்சி புதிய பயணத்தை ஆரம்பிக்குமா?



புருஜோத்தமன் தங்கமயில்

தோல்வி முகத்தில் இருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி, நீண்ட இழுபறிகளுக்குப் பிறகு புதிய தலைமைத்துவத்தை நோக்கி நகரத் தயாராகியிருக்கிறது. தமிழர் தலைநகரான திருகோணமலையில் எதிர்வரும் 27, 28ஆம் திகதிகளில் நடைபெறும் தமிழரசுக் கட்சியின் 17 ஆவது தேசிய மாநாட்டில் புதிய தலைவர் பதவியேற்பார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.யோகேஸ்வரன் ஆகியோர் இம்முறை தலைமைப் பதவிக்கு போட்டியிடுகிறார்கள். பொதுக்குழு உறுப்பினர்கள் நீண்ட காலத்துக்குப் பிறகு நேரடி வாக்க



ளிப்பின் ஊடாக புதிய தலைவரைத் தேர்தெடுக்கப் போகிறார்கள். அவ்வாறு தேர்வாகும் தலைவர், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு கட்சியின் தலைவராகப் பதவி வகிப்பார்.

தந்தை செல்வா தலைமையில் 1949 டிசம்பர் மாதம் 18ஆம் திகதி தோற்றுவிக்கப்பட்ட தமிழரசுக் கட்சி, 1972 மே மாதம் 4ஆம் திகதி தமிழர் (ஐக்கிய) விடுதலைக் கூட்டணி தோற்றுவிக்கப்படும் வரையில், சுமார் 23 வருடங்கள் தனிக் கட்சி அடையாளத்தோடு இயங்கியது. தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றின் கூட்டாகத்தான் தமிழர் விடுதலைக் கூட்டணி தோற்றுவிக்கப்பட்டது. ஆனால், ஆரம்பிக்கப்பட்ட சில காலத்துக்குள்ளேயே மலையக அரசியல் கள நிலைவரங்களைக் கருத்தில் கொண்டு சௌமியமூர்த்தி தொண்டமான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து விலகிக் கொண்டுவிட்டார். இன்னொரு பக்கம் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொன்னம்பலம் குடும்பத்தாரின் தனியாவர்த்தனத்தினால் அல்லாடத் தொடங்கிவிட்டது. இதனால், அந்தக் கட்சியின் மு.சிவசிதம்பரம் உள்ளிட்ட மூத்த தலைவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் இணைந்துவிட்டார்கள். கூட்டணி என்ற அடையாளம் இருந்தாலும் தமிழர் விடுதலைக் கூட்டணி, கட்சிக்குரிய யாப்பு வடிவங்களோடு இயங்கத் தொடங்கியது. அன்று முதல் தமிழரசுக் கட்சியின் பெயர் உறங்கு நிலைக்குச் சென்றுவிட்டது. ஏனெனில், தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற புதிய நாமத்தில் இயங்கியது என்னவோ தமிழரசுக் கட்சிதான். அங்கு புதிதாக இணைந்தவர்கள் என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸில் இருந்து பிரிந்து வந்த ஒருசில தலைவர்களை மட்டுமே கொள்ள முடியும்.

கூட்டணி அடையாளத்துக்குள் தன்னை புகுத்திய தமிழரசுக் கட்சி 32 ஆண்டுகளுக்குப் பின்னர், மீண்டும் தன்னை மீட்டெடுத்துக் கொண்டது. கூட்டணியின் செயலாளர் நாயகமாக இருக்கும் வீ.ஆனந்தசங்கரி தரப்புக்கும், இரா.சம்பந்தன் தரப்புக்கும் இடையில் எழுந்த முறுகல்களை அடுத்துதான், தமிழரசுக் கட்சி மீட்டெடுக்கப்பட வேண்டி வந்தது. அதுவும், தமிழரசுக் கட்சியை மீட்டு மக்களிடம் பிரபலப்படுத்திக் கொடுத்தது தமிழீழ விடுதலைப் புலிகள். 2004 பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் சின்னமாக வீட்டுச் சின்னத்தை முன்மொழிந்ததும் இறுதி செய்ததும் விடுதலைப் புலிகள். அன்று கூட்டமைப்பில் இருந்தவர்கள், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தையும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் வெளிச்ச வீட்டுச் சின்னத்தையும் கூட்டமைப்பின் தேர்தல் சின்னமாக முன்மொழிந்தார்கள். ஆனால், விடுதலைப் புலிகள் தந்தை செல்வாவின் அடையாளத்தோடு இருக்கும் வீட்டுச் சின்னத்தை மக்களிடம் மீண்டும் சேர்ப்பிக்கும் தீர்க்க(தரிசன)மான முடிவை எடுத்தார்கள். முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்குப் பின்னால் இருந்து பார்க்கும் போது, தமிழரசுக் கட்சியைப் புலிகள் மீட்டெடுத்தமையை அப்படித்தான் கொள்ள வேண்டியிருக்கின்றது.

தந்தை செல்வாவினால் தோற்றுவிக்கப்பட்ட கட்சி, விடுதலைப் புலிகளினால் மீட்டெடுக்கப்பட்ட கட்சி என்ற அடையாளங்களோடு இருக்கும் தமிழரசுக் கட்சி கடந்த ஆறு, ஏழு ஆண்டுகளாக படுமோசமான

தொடர்ச்சி ▼

# தமிழரசுக் கட்சி புதிய பயணத்தை ஆரம்பிக்குமா?



தொடர்ச்சி▲


பின்னடைவுகளை நோக்கிச் சென்றது. அதற்கு, கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தொடங்கி அந்தக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள், இளந் தலைவர்கள் என்று அனைவரும் பொறுப்பேற்க வேண்டும். தமிழ்த் தேசிய பரப்பில் இயங்கும் கட்சிகளில், தமிழரசுக் கட்சி மாத்திரமே அரசியல் கட்சிக்குரிய அனைத்துக் கட்டமைப்புக்களையும் கொண்டிருக்கின்றது. அதுபோல, ஒரு பிரதேசத்துக்குள் தன்னைச் சுருக்கிக் கொள்ளாமல் தமிழர் தாயகம் எங்கும் தன்னை விஸ்தரித்திருக்கின்றது. அப்படிப்பட்ட கட்சி 2015 பொதுத் தேர்தலுக்குப் பின்னர் சந்தித்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல், 2020 பொதுத் தேர்தல் என்ற இரு முக்கிய தேர்தல்களிலும் தோல்வி கண்டது. அந்தத் தோல்விக்கான காரணங்கள் அக்குவேறு ஆணிவேறாக ஆராயப்பட்டு விட்டன. அதில், பிரதானமானது கட்சிக்குள் அணி பிரித்து மோதி ஒருவரையொருவர் தோற்கடிக்க முனைந்தமையாகும். எந்தவொரு கட்சியும் தனக்குள் மோதிக்கொள்ள விரும்பாது, ஆனால், கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் கூச்சப்படும் அளவுக்கு தமிழரசுக் கட்சியினர் நடந்து கொண்டார்கள்.

இவ்வளவு பின்னடைவுகளுக்குப் பிறகும் தமிழ்த் தேசியப் பரப்பில் தமிழரசுக் கட்சிதான், முதன்மைக் கட்சியாக இருக்கின்றது. அதாவது, தமிழ் மக்களின் அதிகளவான வாக்குகளைப் பெற்ற கட்சி. அப்படியான நிலையில், அந்தக் கட்சி தன்னைப் பலப்படுத்திக் கொள்வது என்பது, தமிழ் மக்களின் ஆணையென்று கொள்ளப்பட வேண்டும். தமிழரசுக் கட்சி 2004 மீட்டெடுக்கப்பட்ட காலம் முதல் 2014 வரையிலான பத்து ஆண்டுகள் சம்பந்தன் தலைவராக இருந்தார். அதில் முதல் ஐந்து ஆண்டுகள் அது ஒப்புக்கான பதவி மாத்திரமே. ஏனெனில், அப்போது தமிழர் அரசியலின் தீர்மானிக்கும் சக்தியாக விடுதலைப் புலிகளே இருந்தார்கள். 2009க்குப் பின்னரான காலத்தில் சம்பந்தன் தன்னை ஆளுமையான தலைவராக முன்னிறுத்தினார். அதில் குறிப்பிட்டுச் சொல்லும்படியும் நடந்து கொண்டார். ஆனால், அவர், 2014இல் தமிழரசுக் கட்சி தலைமைப் பதவியை மாவை சேனாதிராஜாவிடம் கையளித்த விடயமே அந்தக் கட்சியை மோசமாக தோற்கடிக்கக் காரணமானது. கட்சித் தலைமைப் பொறுப்பை இன்னொருவரிடம் கையளிக்கும் போது, தான் சொல்வதையெல்லாம் கேட்கும் ஒருவராக அவர் இருக்க வேண்டும் என்ற ஒற்றைக் காரணத்தை முன்னிறுத்திக் கொண்டு சம்பந்தன், மாவை சேனாதிராஜாவிடம் கைளித்திருக்கின்றார். அன்று சம்பந்தன் எடுத்த சுயநல முடிவு, கட்சியை பாரிய சிக்கலுக்குள் சென்று சேர்த்தது.

மாவை கட்சித் தலைவராக அறிவிக்கப்பட்டாலும் அவரிடத்தில் முடிவெடுக்கும் எந்த அதிகாரமும் இல்லை. அப்படி அவர் ஏதாவது முடிவுகளை அறிவித்தாலும் அதனை யாரும் கருத்தில் கொள்வதில்லை. தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடுகள் என்ன என்பது குறித்து சம்பந்தன், சுமந்திரன் ஆகியோரின் குரல்களே இறுதியானவையாக பார்க்கப்பட்டன. சம்பந்தன் வயது மூப்பினால் அல்லாடத் தொடங்கிய பின்னரும் கூட தமிழரசுக் கட்சியின் முகமாக மாவை யாரினாலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஏன், சொந்தக் கட்சியினரால்கூட ஏற்கப்படவில்லை. அப்படி ஏற்கப்பட்டால்தானே, தென் இலங்கையும் சர்வ தேசமும் அவரை ஒரு தலைவராக கொள்ளும். பல தருணங்களில் மாவையை, அவருடைய தொகுதிக் கிளைக்குரிய தலைவராகவே பலரும் கருத்தில் கொண்டார்கள். இவ்வாறான நிலை நீடித்தால், கட்சி இன்னும் இன்னும் மோசமான பின்னடைவைக் காணும் என்பதை தமிழரசுக் கட்சியின் இளைய தலைமுறையும், நலன்விரும்பிகளும் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள்.

குறிப்பாக, 2020 பொதுத் தேர்தல் பின்னடைவுகளை அடுத்து தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவ மாற்றம் அவசியமானது என்ற வலியுறுத்தல்கள் அதிகரித்தன. ஆனால், புதிய தலைவரைத் தேர்தெடுப்பதற்கான மாநாட்டினை நடத்துவதற்கே நான்கு ஆண்டுகள் கடந்து விட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தேசிய மாநாட்டைக் கூட்டி புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கட்சி யாப்பினைக் கொண்டிருக்கின்ற கட்சி, தேசிய மாநாடுகளை நடத்துவதையே, பல மத்திய குழுக் கூட்டங்களையும் அரசியல் குழுக் கூட்டங்களையும் கூட்டி அழுத்தங்களை வழங்கி நடத்த வேண்டி வந்திருக்கின்றது. அதற்கு, வயது மூப்பினால் அல்லாடினாலும் பரவாயில்லை தொடர்ந்தும் பதவி பகட்டோடு இருக்க வேண்டும் என்ற மாவையின்

தொடர்ச்சி▼



# தமிழரசுக் கட்சி புதிய பயணத்தை ஆரம்பிக்குமா?

தொடர்ச்சி▲

சுயநலம் மாத்திரமே காரணமாகும்.

எதிர்வரும் 27, 28ஆம் திகதிகளில் கட்சியின் தேசிய மாநாடு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட பின்னரும் கூட, அதனை பிற்போடுவதற்கு மாவை சேனாதிராஜா தொடர்ச்சியாக முயற்சித்துக் கொண்டிருக்கிறார். அதற்கு கூட்டாக அவர், சம்பந்தனின் பெயரைத் துணைக்கு அழைத்துக் கொள்கிறார். கட்சி மாநாட்டினை ஒத்திவைத்தால், கட்சியின் தலைவராகத் தான் தொடந்தும் இருக்கலாம் என்ற பேராசையைத் தாண்டி மாவை சேனாதிராஜா இதன்மூலம் என்னத்தை அடையப்போகிறார் என்று தெரியவில்லை. சம்பந்தன் போலவே, மாவையும் வயது மூப்பு தொல்லைகளினால் அவதிப்படுகிறார். ஆனாலும், அவருக்கு இன்னும் கட்சித் தலைமைப் பதவியை விட்டுவிலகத் துளியும் மனமில்லை.

கட்சியின் திருகோணமலை தொகுதிக் கிளைத் தெரிவு முறையாக நடைபெறவில்லை என்று தெரிவித்து சம்பந்தன் கடிதம் எழுதியிருப்பதான விடயம் மாவையினால் மீண்டும் மீண்டும் முன்கொண்டு வரப்படுகின்றது. ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற தொகுதிக்கிளை தெரிவில் எந்தக் குழப்பங்களும் இல்லை என்று கடந்த மாத இறுதியில் திருகோணமலையில் கூடிய தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவும் உறுதி செய்து விட்டது. ஆனாபோதிலும், திரும்பவும் சம்பந்தனின் பெயரை முன்னிறுத்திய கடிதத்தைக் கொண்டு எப்படியாவது, திருகோணமலைத் தொகுதிக் கிளைத் தெரிவை காட்டி தேசிய மாநாட்டை ஒத்தி வைக்கலாம் என்று மாவை தன்னுடைய இறுதி நேர ஆட்டத்தை ஆடிக் கொண்டிருக்கிறார். கடந்த வாரமும், அவர் தமிழரசுக் கட்சியின் தலைமையகத்தில் தனக்கு இணக்கமானவர்கள் சிலரோடு கூடிப் பேசிவிட்டு, எதிர்வரும் 10ஆம் திகதி சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு கூடும் என்றிருக்கிறார். அங்குதான், தேசிய மாநாட்டினை நடத்துவதா, இல்லையா என்ற இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் கூறியிருக்கிறார். ஆனால், கட்சியின் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கம், மாவையின் கூற்றுக்களைப் புறந்தள்ளி கட்சியின் தேசிய மாநாடு அறிவிக்கப்பட்ட திகதிகளில் நடைபெறும் என்று மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் மத்தியில் சம்பந்தரின் பெயரில் அண்மைய நாட்களில் எழுதப்படுவதாக கூறப்படும் கடிதங்கள் தொடர்பில் சந்தேகம் நீடிக்கின்றது. வயது மூப்பு, மறதி உள்ளிட்ட காரணங்களினால் சம்பந்தன் அல்லற்படுகிறார். அதனைப்பயன்படுத்திக் கொண்டு, அவரின் பெயரில் வேறு நபர்கள் கடிதங்களை எழுதுகிறார்களா என்ற சந்தேகம்தான் அது.

பிறந்திருக்கும் 2024, தேர்தல் ஆண்டாக இருக்கப் போகிறது. அப்படிப்பட்ட நிலையில், தமிழ்த் தேசிய அரசியலில் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சி தன்னை பலப்படுத்த வேண்டியது அவசியமானது. தமிழ்த் தேசிய கட்சிகள் பலமிழக்கும் போது, பௌத்த சிங்கள பேரினவாதக் கட்சிகளும் அவற்றின் துணைக்குழுக்களும் தமிழர் தாயகப் பகுதிகளில் வாக்குகளை கபளீகரம் செய்கின்றன. இது, தமிழ்த் தேசிய அரசியல் பிரதிநிதித்துவத்தை பாரியளவில் வீழ்ச்சியடைய வைக்கின்றது. அப்படிப்பட்ட சூழலில் தமிழரசுக் கட்சி ஆளுமையுள்ள புதிய தலைமைத்துவத்தின் கீழ் செல்வது தவிர்க்க முடியாதது. அது கட்சியை மாத்திரமல்ல, தமிழ் மக்களையும் நம்பிக்கை கொள்ள வைக்கும். தந்தை செல்வா தோற்றுவித்து, புலிகள் மீட்டெடுத்துக் கொடுத்த கட்சியை காலில் போட்டு மிதிக்கும் நிலைக்கு அந்தக் கட்சியினரே கொண்டு சேர்த்துவிட்டார்கள் என்ற வருத்தம் மக்களிடம் அதிகமாகவே உண்டு. அப்படிப்பட்ட நிலையில், அதனைக் கடந்து நம்பிக்கை பக்கங்களை அடைவது அவசியமானது. அந்தப் புள்ளியை தொடுவதற்கான பயணத்தை தலைமைத்துவ மாற்றத்திலிருந்துதாவது தமிழரசுக் கட்சி ஆரம்பிக்க வேண்டும்.



# வடக்கு வர்த்தகர்களின் பிரச்சினைகளுக்கு அடுத்த இரண்டு மாதங்களில் தீர்வு உறுதி

## யாழில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

வடக்கு மாகாண வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு எதிர்வரும் இரண்டு மாதங்களில் தீர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் அதிகாரிகள் எதிர்வரும் இரண்டு வாரங்களில் வடக்கிற்கு விஜயம் செய்து இவ்விடயம் தொடர்பில் ஆராயவுள்ளதாகவும், வடக்கு மாகாண வர்த்தக சமூகத்தினரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு செயலூக்கமான நிறுவனமொன்றை ஸ்தாபிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்ட தொழில்துறையினர், மீனவர்கள் மற்றும் விவசாயிகளுடன் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தொழில்துறையினர், மீனவ சமூகம் மற்றும் விவசாயிகள் உள்ளடங்கிய சுமார் 300 பேர் கொண்ட குழு இந்நிகழ்வில் கலந்துகொண்டதுடன், தமது தொழில்துறை தொடர்பான பிரச்சினைகள் மற்றும் புதிய முன்மொழிவுகளை ஜனாதிபதியிடம் முன்வைத்தனர்.



அந்த அனைத்து விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்திய ஜனாதிபதி சில பிரச்சினைகளுக்கு அதே நேரத்தில் தீர்வுகளை வழங்கவும் நடவடிக்கை எடுத்தார்.

வடக்கு மாகாணத்திற்கு கைத்தொழில் வலயமொன்றை வழங்குமாறு கைத்தொழில்துறையினர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதுடன், அதற்குத் தேவையான காணியை இனங்காணுமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அத்துடன், மாகாண வர்த்தக ஊக்குவிப்பு நிலையமொன்றை வட மாகாணத்திற்கு விரைவாக வழங்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

வடக்கு மாகாணம், தேசிய பொருளாதாரத்திற்கு வினைத்திறனாக பங்களிப்பதற்கு தொழில்துறைகளை அபிவிருத்தி செய்வது இன்றியமையாதது என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இது தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்க்குமாறும் அதிகாரிகளுக்கு மேலும் அறிவுறுத்தினார்.












# கிண்ணியா பாலத்தருகில் நேற்று பாரம்பரியப் படகோட்டப் போட்டி

(ஏ.எச்.ஹஸ்பர்)

கிண்ணியா பாலத்தருகில் மாபெரும் பாரம்பரிய படகோட்டப் போட்டி நேற்று மாலை இடம்பெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் செயலகம் ஏற்பாடு செய்த இந்தப் போட்டியை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆரம்பித்து வைத்தார்.

கிண்ணியா துறையடி கடற் பகுதியில் இருந்து கிண்ணியா பூங்கா வரை கடல் வழியாக இப் படகோட்டப் போட்டி இடம் பெற்றது.

பாரம்பரிய விளையாட்டின் ஒரு பகுதியாக படகோட்டப் போட்டி இடம்பெற்றது.

தைப் பொங்கல் தினத்தை முன்னிட்டு இவ் படகு போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்காக முதலாம் பரிசாக ஒரு லட்சம் ரூபாவும், இரண்டாம் பரிசாக ஐம்பதாயிரம் ரூபாவும், மூன்றாம் பரிசாக இருபத்தியைந்தாயிரம் ரூபாவும் வழங்கப்பட்டன.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ்.தௌபீக்,ஏ.எல்.எம்.அதாவுல்லா,கபில நுவன் அதுகோரள, இலங்கையின் சென்னைத் துணைத் தூதுவர் வெங்கடேஷ் மற்றும் மாகாண திணைக்கள தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் திடீர் இராஜிநாமா

## புதிய தவிசாளராக அவர் தெரிவு




(எஸ்.அஷ்ரப்கான்)

ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவராகக் கடமையாற்றிய முபாறக் அப்துல் மஜீத் மௌலவி தனது தலைமைப் பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

கட்சியை இளைஞர்களிடம் பாரம் கொடுக்க வேண்டும் எனக் கருதி கட்சியின் வருடாந்த பொதுக்கூட்டத்தின்போது தனது தலைமைப் பதவியை இராஜிநாமா அவர் செய்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் கல்முனையில் நடைபெற்ற ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் உயர் பீட பொதுக்கூட்டத்தின்போது அவர் கட்சியின் புதிய தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# மாகாண - தேசிய மட்டத்தில் சாதித்த மட்டு. சாதனையாளர்கள் கௌரவிப்பு







(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண மட்ட மற்றும் தேசிய மட்டத்தில் கராத்தே மற்றும் தாய்வுண்டோ போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்கள் மற்றும் வீராங்கனைகளைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் மட்டக்களப்பு வின்சென்ட் பெண்கள் உயர் கல்லூரியில் இடம்பெற்றது.

எஸ்.கே.ஓ.கழகத் தலைவரும், பிரதான போதனாசிரியருமான எம்.ரி.பிரகாஸ் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பிரதம அதிதியாகவும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்ரினா யுலேக்கா முரளிதரன், கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் சுஜாத்தா குலேந்திரகுமார் ஆகியோர் கௌரவ அதி-தியாகளாகவும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 17 பாடசாலைகளைச் சேர்ந்த 150 இற்கும் மேற்பட்ட வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் இந்நிகழ்வில் போது பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்

இந்நிகழ்வில் கல்வி வலயங்களின் உடற்கல்விப் பணிப்பாளர்கள், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன், காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதய ஶ்ரீதர், பாடசாலை அதிபர்கள், உடற்கல்வித் துறை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





யாழ். பல்கலை கல்விசார் ஊழியர்களுடன் ஜனாதிபதி சந்திப்பு

# பல்கலைக்கழகக் கட்டமைப்பில் பாரிய மாற்றத்துக்குத் திட்டம்





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் யாழ். பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களுக்கும் இடையிலான சந்திப்பு யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் எஸ். ஸ்ரீசற்குணராஜா உட்பட பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் உள்ளிட்ட கல்விசார் ஊழியர்கள் இதில் கலந்துகொண்டனர். யாழ்.பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்கான திட்டமும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

நவீன தொழில்நுட்பத்துடன் பல்கலைக்கழக துறையை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை இதன்போது சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பல்கலைக்கழக மாணவர்களின் ஆங்கில மொழி அறிவை மேம்படுத்துவதற்கு விசேட கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அதற்காக தற்போதுள்ள மனித வளப் பற்றாக்குறையைத் தீர்க்க தொலைக் கல்வி முறைகளைப் பயன்படுத்துவதற்கான இயலுமையையும், அதற்காக பல்கலைக்கழக பேராசிரியர்களாக பணியாற்றி ஓய்வுபெற்ற புலம்பெயர் உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவதற்கான திறனையும் ஜனாதிபதி விளக்கினார். அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மேலும், இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களுடன் விரிவுரையாளர் பரிமாற்ற நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டு மாணவர்களையும் கவரக்கூடிய வகையில் இலங்கையின் பல்கலைக்கழகக் கல்வியின் தரத்தை உயர்த்துவதே அரசின் நோக்கமாகும் என்றும், புதிய பல்கலைக்கழகங்கள் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் எதிர்காலத்தில் இலங்கைப் பல்கலைக்கழகக் கட்டமைப்பில் பாரிய மாற்றம் ஏற்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏகநாயக்க, யாழ்.மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன், ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய, ஜனாதிபதியின் சமூக அலுவல்கள் பணிப்பாளர் நாயகம் ரஜித் கீர்த்தி தென்னக்கோன் மற்றும் வவுனியா பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் த.மங்களேஷ்வரன் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# மலசலகூடத்துக்குள் ஒளிந்த நபர் ஹெரோயினுடன் கைது!

'யுக்திய ஒப்பரேஷன்' நடவடிக்கையின்போது, மலசலகூடத்துக்குள் ஒளிந்தவர் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொல்கொட பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய துடுவ பகுதியில் திடீர் தேடுதல் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது நபர் ஒருவர், பொலிஸாரிடம் இருந்து தப்ப மலசலகூடத்துக்குள் ஒளிந்துள்ளார்.

அவரை வெளியே அழைத்துப் பரிசோதித்தபோது அவர் வசம் ஹெரோயின் இருந்துள்ளது.

ஹெரோயின் தொடர்பில் மேற்படி நபருக்கு எதிராக 6 வழக்குகள் இருக்கின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





# மலையகத் தியாகிகள் தினம் ஜனவரி 10 கொட்டகலையில்

மலையக மக்களின் அரசியல், தொழில் உரிமைகளுக்காக உயிர்நீத்த மலையகத் தியாதிகளை நினைவுகூரும், 'மலையக தியாகதிகள் தினம்' எதிர்வரும் 10 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதன் பிரதான நினைவேந்தல் நிகழ்வு கொட்டகலை கொமர்சல் லேக்கில் பிற்பகல் 3.00 மணிக்கு இடம்பெறும் என்று 'பிடிதளராதே' அமைப்பு தெரிவித்துள்ளது.

மலையகத் தமிழர்களுக்கான தொழில்சார் மற்றும் இதர உரிமைகளை வென்றெடுப்பதற்கான உரிமைப்போராட்டத்தில் உயிர்நீத்த அனைத்து தியாகிகளையும் நினைவுகூர்ந்து பொதுச்சுடர் ஏற்றப்பட்ட பின்னர் நிகழ்வின் ஏனைய அம்சங்கள் நடைபெறும்.

1930 இற்குப் பிற்பட்ட காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க அரசியல் உரிமைப் போராட்டங்களில் பங்குபற்றி உயிர்நீத்த அனைத்து தோட்டத் தொழிலாளர்களையும் மலையகத் தியாகிகள் என அடையாளம் காண்கின்றோம்.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் பங்குகொண்டு எமக்காக தனது இன்னுயிரைத் தியாகம் செய்தவர்களை நினைவுகூர அனைவரும் வருகை தர வேண்டும் என்று பிடிதளராதே அமைப்பினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மலையக மண்ணின் முதல் தியாகியான முல்லோயா கோவிந்த உயிரிழந்த ஜனவரி 10 ஆம் திகதியே மலையக தியாகிகளுக்காக தினமாக நினைவுகூரப்பட்டு வருகின்றது.

# பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட மின்சார சபை ஊழியர்களின் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

## அமைச்சர் கஞ்சன பணிப்புரை



அத்தியாவசிய சேவையான மின் விநியோகத்திற்கு இடையூறு ஏற்படும் வகையில், பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட ஊழியர்களின் சேவையை இடைநிறுத்தி ஒழுக்காற்று நடவடிக்கையை முன்னெடுக்குமாறு துறைசார் அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கை மின்சார சபையின் தலைவருக்கு கடிதம் ஒன்றினூடாக மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

கடந்த 3 ஆம், 4 ஆம் மற்றும் 5 ஆம் திகதிகளில் சில ஊழியர்களினால் முன்னெடுக்கப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பினால் மின்சாரக் கட்டணம் செலுத்தும் கருமபீடங்களை மூட வேண்டியேற்பட்டதாகவும் பொதுமக்கள் சேவை வழங்கல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதாகவும் பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின் விநியோகத்துடன் தொடர்புடைய அனைத்து சேவைகளையும் அத்தியாவசிய சேவைகளாக அறிவித்து அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளமையும் மேற்படி கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மின்சார சபை நிர்வாகத்தினால் கடந்த 2 ஆம் திகதி அனைத்து ஊழியர்களின் விடுமுறைகளும் இரத்து செய்யப்பட்டிருந்தன எனவும் அமைச்சர் கஞ்சன தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பின்புலத்தில் திட்டமிட்டு அல்லது சட்டத்திற்கு புறம்பாக அல்லது சுகயீன விடுமுறையை அடிப்படையாகக் கொண்டு சேவைக்கு சமுகமளிக்காமல் சில ஊழியர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர் என அமைச்சரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனுடன் தொடர்புடைய ஊழியர்கள் தொடர்பான தகவல்களை அமைச்சுக்கு வழங்குமாறும், அவர்களை சேவையிலிருந்து இடைநிறுத்தி ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவினால் இலங்கை மின்சார சபை தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 07.01.2024




இன்று மகிழ்ச்சியான தருணங்கள் காணப்படும். வளர்ச்சிக்கான வாய்ப்பு உள்ளது. இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனளிக்கும்.

உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். நீங்கள் பணிகளை விரும்பிச் செய்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். பங்கு வர்த்தகம் மூலம் லாபமும் ஆதாயமும் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் ஆரோக்கியத்துடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.




இன்று முன்னேற்றகரமான நாள். உங்கள் இலக்குகளை அடையும் ஆற்றல் மிகுந்து காணப்படும். உங்கள் பேச்சாற்றல் காரணமாக நீங்கள் பிரபலமாவீர்கள்.

பணியிடச் சூழல் முன்னேற்றகரமாக இருக்கும். உங்கள் திறமைகள் மூலம் நீங்கள் பிரகாசிப்பீர்கள். பணியில் வெற்றி பெற வேண்டும் என்ற மனநிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் செயல்களின் மூலம் உங்கள் துணையை திருப்திப்படுதுவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று உபரிப் பணம் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களின் நேர்மறையான எண்ணம் உங்கள் ஆரோக்கியத்தை நல்ல முறையில் பராமரிக்க உதவும்.




இன்று சராசரிக்கும் சற்று மேலான பலன்களை எதிர்பார்க்கலாம். உங்கள் இலக்கை அடைய நீங்கள் சிறந்த முறையில் திட்டமிட வேண்டும்.

பணியில் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். இறுதியில் உங்கள் நேர்மையான முயற்சியால் நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

சில சமயங்களில் உங்கள் துணையிடம் பொறுமையின்றி காணப்படுவீர்கள்.உறவில் நல்லிணக்கம் பேண பொறுமை அவசியம்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். என்றாலும் தேவையற்ற கூடுதல் செலவுகள் ஏற்படும்.

முதுகு மற்றும் மூட்டுக்களில் விறைப்புத் தன்மை ஏற்படும். குளிர்ச்சியான பொருள்களைத் தவிர்க்கவும்.




இன்று சூழ்நிலைகள் சவால்கள் நிரம்பியதாக இருக்கும். உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். தகவல் தொடர்புக் குறைபாடு காரணமாக உங்கள் முயற்சியில் வெற்றி கிடைப்பது கடினமாக இருக்கும்.

பணியிடத்தில் திருப்திகரமான நிலை இருக்கும். பணியில் வளர்ச்சி காண நீங்கள் மிகுந்த முயற்சியும் கடின உழைப்பும் கொள்ள வேண்டும்.

நீங்கள் அமைதியின்றி காணப்படுவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும். இதனால் புரிந்துணர்வு குறையும்.

இன்று பணப்புழக்கம் குறைவாக இருக்கும். நீங்கள் வரவையும் செலவையும் விவேகத்துடன் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.




இன்று சிறப்பான சூழ்நிலை காணப்படும். உங்கள் ஆற்றலும் உற்சாகமும் அதிகரித்து காணப்படும். உங்கள் சுய முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு சிறப்பான நாள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். கடினமான பணிகளிக் கூட எளிதாக முடிக்கும் திறமை உங்களிடம் காணப்படும்.

உங்கள் துணையுடன் உரையாடும் போது அமைதியான அணுகுமுறை வேண்டும். இந்த அணுகுமுறை நல்ல சூழ்நிலையை உருவாக்கும்.

போதிய பணம் காணப்பட்டு நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். நீங்கள் புதிய முதலீடுகளுக்கு திட்டமிடலாம்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று சிறப்பான ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று பாதுகாப்பற்ற உணர்வு காணப்படும். இன்று உங்கள் இலக்குகளை அடைய உங்கள் அதிர்ஷ்டம் சாதகமாக இருக்காது. என்றாலும் உங்கள் அணுகுமுறையில் பொறுமையும் உறுதியும் தேவை . இன்று சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்காமல் இருக்க உங்கள் செயல்களை முன்கூட்டியே திட்டமிட வேண்டும்.

பணியிடச் சூழல் சவால்கள் நிறைந்து காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படும் என்பதால் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும்.

குடும்பப் பிரச்சினைகள் சிலவற்றை நீங்கள் எதிர் கொள்ள நேரும்.இதனால் உங்கள் துணையுடனான நல்லுறவு பாதிக்கப்படும்.

இன்று அதிக பணம் சம்பாதிக்கும் வாய்ப்புக் குறைவு.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. எந்தவொரு செயலையும் யோசித்து செய்வதன் மூலம் எதிர்மறை விளைவுகளை தடுக்கலாம். மனதை பொழுதுபோக்கு விஷயங்களில் செலுத்துங்கள்.

கவனக்குறைவு காரணமாக நீங்கள் பணிகளில் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள பணிகளை கவனமுடன் திட்டமிட வேண்டும்.

இருவரிடையே நிலவும் தவறான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் சில விரும்பத் தகாத தருணங்களை சந்திக்க நேரலாம்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்காது. தேவையற்ற செலவுகளை இன்று நீங்கள் சந்திக்க நேரலாம்.அதனைக் கடினமாக உணர்வீர்கள்.

தூக்கமின்மை காரணமாக இன்று தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். தெய்வீக இசை கேட்பது உங்களுக்கு ஆறுதலை அளிக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள் அல்ல.

பணியிடத்தில் பதட்டம் கானபப்டும். சகபணியாளர்களின் மூலம் தொல்லைகள் ஏற்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். பெண் ஊழியர்களிடத்தில் கவனமாக இருக்கவும்.

மோசமான புரிந்துணர்வின் காரணமாக உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே வாக்குவாதம் ஏற்படும். எனவே உங்கள் துணையுடன் பேசும் போது அமைதியாக அணுகுவது நல்லது.

இன்று பணப் புழக்கம் குறைந்து காணப்படும். இன்று பண இழப்பு ஏற்படும் என்பதால் பணத்தை கவனமாக செலவு செய்ய வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.01.2024

## தனுசு

இன்று நன்மைகள் விளையும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைவீர்கள்.இன்றைய செயல்களை திறமையாக ஆற்றத் திட்டமிட வேண்டியது அவசியம்.

பணிகள் அதிகமாக காணப்பட்டாலும் நீங்கள் குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பீர்கள். பணிகளை தன்னம்பிக்கையுடன் கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவைப் பராமரிப்பீர்கள்.குடும்பத்தில் நிகழும் சுப நிகழ்ச்சியில் இருவரும் மகிழ்ச்சியான தருணங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பணப்புழக்கம் திருப்தியை அளிக்கும். இருக்கும் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் நேர்மறையான எண்ணம் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மகரம்

இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் புத்திசாலித்தனத்தைக் கொண்டு நீங்கள் நிறைய சாதிக்கலாம். உங்கள் சுய முயற்சி மூலம் உங்கள் செயல்களில் வளர்ச்சி காண்பீர்கள். புதுமையான முறையைக் கையாள்வதன் மூலம் நீங்கள் உங்கள் இலக்குகளில் வெற்றி பெறலாம்.

பணிகள் திருப்திகரமாக இருக்கும். உங்கள் பணிகள் தரம் நிறைந்ததாக இருக்கும். இதனால் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். சமூகமான சூழ்நிலை காரணமாக பரஸ்பர அன்பும் நல்லிணக்கமும் காணப்படும்.

இன்று அதிக பணவரவு காணப்படும். பொருளாதார பாதுகாப்பை உருவாக்கிக் கொள்வீர்கள்.

## கும்பம்

இன்று துடிப்பான நாளாக இருக்காது. இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். கஷ்ட நேரங்களில் உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். உங்கள் செயல்களின் முடிவுகளின் நிச்சயமற்ற தன்மை காணப்படும்.

பணியில் வளர்ச்சி காண நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும். என்றாலும் குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் பிரச்சினை காணப்படும். அது இன்றைய நாளின் மகிழ்ச்சியான சூழ் நிலையை பாதிக்கும்.

இன்று நிதிவளர்ச்சி மகிழ்ச்சிகரமாக இருக்காது. தேவையற்ற கூடுதல் செலவுகள் ஏற்படும்.

## மீனம்

இன்று எதிர்பார்த்த பலன்கள் இருக்காது. மின் சாதனங்களை பயன்படுத்தும் போது கவனம் தேவை. வாகனம் ஓட்டும் போது கவனம் தேவை. தியானப் பயிற்சி ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் சவால்களை சந்திக்க திறமையாக திட்டமிட வேண்டும். பணிகளை மேற்கொள்ளும் போது நீங்கள் தவறு செய்ய நேரலாம்.

குடும்பப் பிரச்சினை காரணமாக மந்தமான மன நிலை காணப்படும். உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

வீட்டை நவீனமாக்க முயல்வீர்கள். ஆனால் போதிய பணம் கையில் இருக்காது.எதிர்கால செலவுகளுக்காக பணத்தை பாதுகாக்க வேண்டிய அவசியம் காணப்படும்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு சற்று கவலையை அளிக்கும்.






# மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 56 இலங்கையர்களை மீட்க இணக்கம்



தாய்லாந்து எல்லைப் பகுதியை அண்மித்து, மியன்மாரின் கெரன் மாகாணத்தின் மியாவெட்டி பகுதியில் பயங்கரவாத குழுவொன்றினால் நிர்வகிக்கப்படும் பகுதியில், இலங்கை இளைஞர், யுவதிகள் 56 பேர் தடுத்து வைக்கப்பட்டு, பல்வேறு கணினி குற்றங்களில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர் என அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில், மேற்படி 56 இலங்கையர்களையும் சிறப்பு நடவடிக்கையின் மூலம் மீட்பதற்கு அந்த நாட்டு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை – மியன்மார் வெளிவிவகார அமைச்சர்களுக்கு இடையில் இடம்பெற்ற தொலைபேசி கலந்துரையாடலின்போது இது தொடர்பில் சாதகமான பதில் கிடைத்ததாக மியன்மாருக்கான இலங்கை தூதுவர் ஜானக்க பண்டார தெரிவித்துள்ளார்.

# காலி சிறைக் கைதிகள் ஐவர் வைத்தியசாலையில் அனுமதி

காலி சிறைச்சாலை கைதிகள் ஐவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் தற்போது காலி – கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் காமினி திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

காய்ச்சலுடன் அடையாளம் காணப்பட்ட ஐவரே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் காலி சிறைச்சாலையில் கைதி ஒருவருக்கு மூளைக்காய்ச்சல் உறுதிப்படுத்தப்பட்டது.

இதனிடையே, மாத்தறை சிறைச்சாலையில் மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட இரு கைதிகள் உயிரிழந்தனர்.

தற்போது அங்கு நிலைமை சீராக உள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.



# பொலிஸாரின் திடீர் சோதனை நடவடிக்கைகளுக்கு இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் கடும் எதிர்ப்பு!

தன்னிச்சையான கைதுகள், பொலிஸாரின் மிலேச்சத்தனமான நடவடிக்கைகள் மற்றும் கொலைகளை நிறுத்துமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நீதிச்செயன்முறை நிலைநாட்டப்பட வேண்டுமெனவும் மக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டுமெனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினர் அறிக்கையொன்றின் ஊடாக கோரியுள்ளனர்.

அண்மைக்காலமாக அதிகரித்து வரும் தன்னிச்சையான கைதுகள், பிடியாணையற்ற பொலிஸ் சோதனைகள் மற்றும் சட்டவிரோத கொலைகள் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

உரிய நடவடிக்கைகள் மற்றும் சட்டவாட்சியின் முக்கியத்துவத்தை அறிக்கையூடாக வலியுறுத்தியுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், இந்த சிக்கலை விரைவில் தீர்த்து நீதிமன்ற கட்டமைப்பினூடாக பொது மக்கள் நம்பிக்கையை வழமைக்குக் கொண்டுவருமாறு அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டுள்ளது.

குற்றவாளியாக இருந்தாலும் அவர்களுக்கு வாழ்வதற்கு உள்ள உரிமை, அரசமைப்பினூடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

உரிய சோதனை பிடியாணை அல்லது சோதனை உத்தரவுகள் இன்றி முன்னெடுக்கப்படும், சொத்துகள் மீதான சேதம் உள்ளிட்ட பொலிஸ் சுற்றிவளைப்புகள், சட்டரீதியான செயற்பாடுகளை மீறுவனவாகவும் நீதியின் கோட்பாடுகளுக்கு தீங்கிழைப்பனவாகவும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனம் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை சீர்குலைப்பனவாகவும் உள்ள்ன என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

போதைப்பொருட்கள் தொடர்பில் சட்ட ரீதியான சேவையை வழங்கிய சில சட்டத்தரணிகளை சூழ்ச்சியாளர்கள் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்த கருத்து தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கம் தமது கண்டனங்களை வெளியிட்டுள்ளது.

அனைத்து இலங்கையர்களுக்குமான நீதி மற்றும் நீதியான சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்காக சட்டத்தின் ஆட்சியையும் உரிய நடைமுறையையும் உறுதியாக நிலைநிறுத்துவது மிகவும் முக்கியமானதெனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.